# <u>முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.</u>

## <u>MCOP. No.146/2024</u>

2026-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 19-ஆம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **ம.சா.2 வது** நபரின் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 54-வது விதியின் 9-வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிமாறன் | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

<u>முதல் விசாரணை:</u>

நான் இந்த வழக்கில் நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன்.

<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை</u>:

விபத்து சம்மந்தமாக நான் காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. விபத்து சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. என்னுடைய சொந்தஊர் துறையூர் ரோட்டில் உள்ள செஞ்சேரி ஆகும். எசனை ஏரிக்கரை ரோட்டில் எப்போதும் போக்குவரத்து அதிகமாக இருக்கும் என்றால் விபத்து சமயத்தில் குறைவாக இருந்தது. அந்த ரோடு வளைந்து, வளைந்து போகும். விபத்து சமயத்தில் இறந்துபோனவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்தை பார்க்கவில்லை என்றும், அதனால் தான் தலைக்கவசம் அணியாதவரை அணிந்ததாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் அவருக்கு தலையில் அடிப்பட்டது என்றால் வயிறு மற்றும் காலில் அடிப்பட்டது. விபத்தை நான் பார்க்கவில்லை என்றும், இறந்துபோனவர் எனக்கு

தெரிந்தவர் என்பதால் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.